# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.30/2025**

**2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | கார்பெண்டர் |
| பெயர் | - | ஜோசப் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜா | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 36/2025 |
| சாதி | - | | | | |

**10.12.2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார்பெண்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மதியம் 03.00 -04.00 மணியளவில் நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள மரக்கடையில் வேலை செய்து கொண்டிருந்த போது, நான் பணிபுரியும் கடை உரிமையாளர் சாஜி என்பவருக்கும் பக்கத்து கடைக்காரரான சோனாவிற்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. அப்போது, அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. சோனா கடை முன்பு பொருட்களை அடிக்கி வைத்து, பாதையை மறைத்துவிட்டார். சோனா எங்களிடம் யாரும் பிரச்சனைக்கு வரக்கூடாது என்று கூறி எங்களை வழிமறித்தார். இருவருக்கும் சண்டை அதிகமாகிவிட்டது. அப்போது சோனா எங்களை பார்த்து பிரச்சனை ஏற்பட்டால் நாங்கள் சாட்சிக்கு வர வேண்டும் என்று கூறினார். அப்போது, நான் சோனாவிடம் சாட்சி சொல்ல மட்டும் வரவேண்டும் என்கிறாய், பிரச்சனைக்கு வரக்கூடாது என்று கூறுகிறாய். அதனால் நான் எதற்கும் வரமாட்டேன் என்று கூறினேன். அப்போது, ஆஜர் எதிரி சுதீஸ் என்னை பார்த்து என்னாடா வாய் பேசுகிறாய் என்று கூறினார். அதற்கு நான் சோனாவிடம் தான் பேசுகிறேன். உங்களுக்கும், எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று கூறினேன்.

அத்துடன் எதிரி அமைதியாகிவிட்டார். நானும் அமைதியாகிவிட்டேன். பின்னர் எதிரி உளியை எடுத்துக்கொண்டு வந்து வலது பக்க கழுத்து அருகே குத்த வந்தார். நானும், எனது கடையின் உரிமையாளர் சாஜியும் தடுத்துவிட்டோம். பின்னர், எதிரியை அனுப்பிவைத்தார். சம்பவத்தின் போது, நானும், கடை உரிமையாளர் சாஜி மற்றும் பில்டிங் உரிமையாளர் சம்பவத்தின்போது இருந்தார். பின்னர் நான் வால்பாறை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. நான் சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் போலீசார் எழுதிக்கொடுத்தார்கள். நான் கையொப்பம் செய்தேன். ( **அந்த புகார் மனு அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காட்டப்படும் உளியை வைத்து தான் சம்பவத்தின் போது ஆஜர் எதிரி என்னை குத்த வந்தார். (**அந்த உளி அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) (**அதன் PR.No.19/2024**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.30/2025**

**2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 02-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | கார்பெண்டர் |
| பெயர் | - | சாஜி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜோசப் | சமயம் | - | |
| கிராமம் | - | சிறுவர் பூங்கா | வயது | - | 50/2025 |
| சாதி | - | | | | |

**10.12.2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார்பெண்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜோசப் எனது கடையில் வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. மாலை நேரத்தில் நான் கடையில் வேலை செய்து கொண்டிருந்த போது, கடையின் உரிமையாளர் ஜெயக்குமாருக்கும், சோனா என்பவருக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. ஆஜர் எதிரி சுதீஸ், சோனா என்பவரின் அண்ணன் ஆவார். சோனாவுக்கும், ஜெயக்குமாருக்கும் இடையே உள்ள பிரச்சனையில் எதிரி சோனாவிற்கு ஆதரவாக அங்கு வந்தார். அப்போது, எதிரி அங்கிருந்த உளியை எடுத்து ஜோசப்பின் கழுத்தில் வைத்துவிட்டார். ஜோசப் சத்தம் போடவே நான் திருப்பி எதிரியின் கையை பிடித்துவிட்டேன். பின்னர் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர், ஜோசப் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரி ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.30/2025

**2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.03 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர் | - | ஜெயக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஜெயராமன் | சமயம் | - | |
| கிராமம் | - | க.எண்.10214-A, வாழைத்தோட்டம், பேருந்து டெப்போ அருகே | வயது | - | 48/2025 |
| சாதி | - | | | | |

**<u>10.12.2025</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜோசப் என்பவரை தெரியும். அவர் என் இடத்தில் உள்ள மரக்கடையில் வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை இடப்பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். ( **பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) என்னிடம் காட்டப்படும் படிவம் 91-ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2-வது சாட்சி கைொயப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 18.07.2024-ம் தேதி இரவு 09.30 மணியளவில் வால்பாறை காவல் நிலைய குற்ற எண். 92/2024 வழக்கு சம்பந்தமாக போலீசார் என் கடை முன்பு விசாரணை செய்த போது, நானும், பாலாஜி என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், நானும், பாலாஜி என்பவரும் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் எங்கள் முன்பாக 21.45 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்து மரக்கைப்பிடியுடன் கூடிய உளி ஒன்றை மகஜரில் கைப்பற்றினார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் என்னிடம் படிவம் 91-ல் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: இல்லை.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.30/2025**

**2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 04-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | ஆட்டோ ஓட்டுநர் |
| பெயர் | - | பாலாஜி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மணி | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 25/2025 |
| சாதி | - | | | | |

**<u>10.12.2025</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். அ.சா.1 ஜோசப் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91-ல் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 18.07.2024-ம் தேதி இரவு 09.30 மணியளவில் வால்பாறை காவல் நிலைய குற்ற எண். 92/2024 வழக்கு சம்பந்தமாக போலீசார் அ.சா.3-ன் கடை முன்பு விசாரணை செய்த போது, நானும், அ.சா.3-ம் அங்கு நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், நானும், அ.சா.3 ஜெயக்குமார் என்பவரும் பார்வை மகஜரில்

கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் எங்கள் முன்பாக 21.45 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்து மரக்கைப்பிடியுடன் கூடிய உளி ஒன்றை மகஜரில் கைப்பற்றினார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர், போலீசார் என்னிடம் படிவம் 91-ல் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>: இல்லை

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.